## 70. தேவ கரத்தில் இருக்கின்றேன்

### பல்லவி

தேவ கரத்தில் இருக்கின்றேன்
என்னை கனிவோடு நடத்துகிறீர்
தாயை போல தேற்றுகிறீர்
தந்தை போல அணைகின்றீர்

### அனுபல்லவி

*ஆராதனை உமக்கே ஆராதனை உமக்கே - 2*

### சரணங்கள்

1. எத்தனை துன்பங்கள் வந்தது
நீர் என்னை கைவிடவில்லை
அன்பின் கரத்தால் தாங்குகிறீர்
இரக்க கரத்தால் தேற்றுகிறீர்
- ஆராதனை

2. பெரிய வனாந்திர பாதையில்
இதுவரை நடத்தி வந்தீர்
தண்ணீரற்ற வறட்சியில்
ஜீவ தண்ணீரானீர்
- ஆராதனை

3. கொள்ளிவாய் சர்ப்பமும் நெருங்கியதே
விசத் தேள்களும் நெருங்கியதே
சேதம் வராமல் காத்திட்டீர்
உம் கரத்தால் மூடி மறைத்தீரே
- ஆராதனை